

பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# நீதிமான்களோ சிங்கத்தைப் போல தைரியமாய் இருக்கிறார்கள்.

நீதி 28:1

செய்தி மலர்
2021
ஆகஸ்டு

இதழ் : 4
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையார் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பேரிடர் காலத்திலும் கர்த்தர் நம் சபையின் ஒவ்வொரு குடும்பத்தையும் தனிப்பட்ட யாவரையும் விசேஷமாக சிறு பிள்ளைகளையும் கர்த்தர் தாமே கிருபையால் காத்து வருகின்ற தயவை நினைத்து தனிப்பட்ட விதத்திலும் செயற்குழுவினர் சார்பிலும் ஸ்தோத்தரிக்கின்றேன்.

கடந்த மாதம் முழுவதும் கர்த்தர் நம்மை கண்ணின் மணிபோல பாது காத்து நடத்திய விதத்தை நினைத்த கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்! அனைவரும் நலமுடன் இருக்கவேண்டும் என்பதே எனது அனுதின ஜெபமும் கூட! அவ்வண்ணமே நீங்களும் சபைக்காகவும் சபையின் ஊழியங்களுக்காக ஜெபிக்கிறீர்கள் என்பதை கர்த்தருக்குள் விசுவாசிக்கின்றேன். இந்த மாதத்திலும் சபையின் ஆராதனைகள் ஒவ்வொன்றிலும், தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதல் காண கர்த்தரிடத்தில் மன்றாடுகிறேன்.

## நீதிமான்களோ சிங்கத்தைப்போல தைரியமாயிருக்கிறார்கள் (நீதி 28:1)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ ஜனமே இன்றைய சூழ்நிலைகள் நம்மை அநேக விதத்திலே கலங்கடிக்க செய்கின்றது. நம்மையும் அறியாமல் தோல்விகள் நம்மை சூழ, வீழ்த்த முற்படுவதை நம்மால் உணர முடிகிறது. ஆனாலும் நம்மை எல்லா சூழ்நிலைகளிலும் வெற்றி பெற செய்பவர் நம் நாதர் ஜெயம் கொடுக்கிற இயேசு கிறிஸ்துதானே? அதை நாம் மறந்து விடக்கூடாது.

சாத்தானின் முக்கிய, முதல் வேலை கர்த்தரை நம்பியிருக்கின்ற பிள்ளைகளை கலங்கடிப்பதும், பயங்காட்டுவதும், பாவத்தை செய்ய தூண்டுவதுமாகத்தான் இருக்கும். இதனால் நம் ஆவிக்குரிய வாழ்க்கை பெலனற்று போய்விடுமோ, அசுத்த ஆவிகள் நம்மை ஆட் கொண்டுவிடுமோ என்று பயம் வேண்டாம். போர்களத்தில் நிற்கும் ஒரு வீரனுக்கு அவன் கையில் இருக்கும் அநேக விதமான ஆயுதங்களைவிட அவனுடைய **"தைரியம்தான் பெரிய ஆயுதம்"**. அதை நாம் ஒருகாலும் மறந்து விடக்கூடாது.

தாவீதின் வார்த்தைகள் நம்மை தேற்றட்டும் "என் கைகளை போருக்கும், என் விரல்களை யுத்தத்திற்கும் பழக்குவிக்கிற என் கன்மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்"(சங் 144:1),

3 ஆம் பிரியமானவர்களே ஸ்தோத்திர பலியிடுகிறவன் கர்த்தரை மகிமைபடுத்துகிறான், அவரை உயர்த்தும் எந்த இடத்திலும் வந்து அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார், நம்மோடு தங்குகிறார், அவரின் நீதி நம்மேல் உதிக்கும். அவரை நோக்கின முகங்கள் பிரகாசமடைகின்றது, நம்முடைய பிரகாசத்தையும், சந்தோஷத்தையும், சமாதானத்தையும் காண்கிறவர்கள் கர்த்தரை காண்பார்கள். இப்படியான தைரியத்தோடு, மனபெலத்தோடு, விசுவாசத்தோடு வாழ்ந்து நாம் ஜீவிக்க, சோதனைகளை முறியடிக்க கர்த்தர்தாமே அவர் வார்த்தைகளை அனுப்பி, நம் ஜெப வேலையில் நம்மோடு இடைபட்டும் , அவரை ஆராதிக்கின்ற போதும், அவரை எந்த நிலையிலும் உயர்த்தும் போதும் வந்து நம்மை விடுவிக்கிற தேவன் அவர், சூழ்நிலைகள் மாறினாலும், இயேசு என்றும் மாறாதவர் ஆதலால் திடன் கொள்வோம்.

"பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்" "அன்பிலே பயமில்லை" (1 யோவான் 4:18)

ஆம் பிரியமானவர்களே அவர் நம்மீது வைத்திருக்கிற அன்பினாலே அவர் எல்லா பயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரித்தும், ஆசீர்வதித்தும், பெலனடைய செய்யும், மற்றும் தைரியப்படுத்தும். இதுதான் "இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் தைரியம்".

அவரைப்பற்றும் விசுவாசத்தினால் அவருக்குள் நமக்குத் தைரியமும், திடநம்பிக்கையேடே, தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டு. (எபேசி 3:12) அவர் மேல் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தினாலே அவருடைய பிள்ளைகளாகிறோம். எப்படி நம் பிள்ளைகள் நம்மீது வைத்திருக்கின்ற அன்பினாலும், கீழ்படிதலினாலும், சில சமயம் பயத்தினாலும் நம்மிடத்தில் வருகின்றபோது அவர்களை எவ்வளவாய் நேசிக்கிறோம், அரவனைக்கின்றோம், உலக ஆஸ்திகளை கொடுக்கின்றோம், இதே போல நாமும் எல்லாவற்றிலும் மேலாக கர்த்தர்மேல் நம்பிக்கை கொண்டிருக்கும்போது, இயேசுவினிடத்தில் விசுவாசத்தோடு, அன்பு செலுத்தும் போது அப்பா பிதாவே என்றழைக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆசீர்வாதங்களை கொடுப்பார், நாமும் தைரியமாக அவரின் கிருபாசனத்தன்டை கிட்டி சேரலாம்.

அவர் சிந்தின இரத்தம், நம்மை ஒவ்வொரு நாளும் நம் பாவத்தை கழுவி சுத்திகரித்துக் கொண்டிருக்கின்றது, நாமும் நம்முடைய குற்ற மனசாட்சிக்கு விலகி, உற்சாகத்தை இழக்காமல், தேவபெலன் கொண்டு தேவ சாட்சியாய் வாழ்வோம், காரணம் எல்லா சாட்சிக்கும் மேலானது மனசாட்சி, நம் இருதயம் நம்மை குற்றவாளியென்று சொல்லக்கூடாது,

அப்படி இருந்தால் நம்முடைய எல்லா பெலனும், தைரியமும், விசுவாசமும் கிரியை அற்றதாக மாறிவிடும்.

தேவனுக்கு முன்பாகவும் மனுஷருக்கு முன்பாகவும் எல்லா விஷயங்களிலும் நமக்கு நல் மனசாட்சி வேண்டும். (அப்போ 24:16)

எல்லா நேரத்திலும், எல்லா சூழ்நிலைகளிலும், தாவீதைப்போல, தானியேலைப் போல, கர்த்தரை ஸ்தோத்தரித்து தையிரியம் கொள்வோம்.

இந்த மாதம் நடக்க இருக்கும் ஆராதனைகள் மற்றும் ஜெப கூடுகைகளுக்காக தங்கள் தனிப்பட்ட ஜெபங்களில் ஜெபித்துக் கொள்ளுங்கள் கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும் பேர் பேராக ஆசீர்வதிப்பாராக! கர்த்தர் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக!

ஆமென் ! அல்லேலூயா!

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
S.ஜெயசேகர்

வாயார உம்மை புகழ
வார்த்தைகள் பல தேட
வார்த்தையே நான் என்று
வசனித்து சொன்னீரே

சிந்தித்தேன் உன்னை
எப்படி சந்தித்தேன் என்று
சந்தித்த போதுதான்
நான் தெரிந்து கொண்டேன்
என் சிந்தனையே நீர்தானென்று

அந்நிய தேவர்களை
ஆர்வமாய் நான் சேர
அக்கரையாய் வந்தழைத்து
நானே தேவனென்றீர்

பாவியாய் நான் இருக்க
பரிசுத்த ஆவியால் எனைநிரப்பி
பாடுகள் பல ஏற்று
பலியாய் போனீரே
சிலுவை மரத்தினிலே

சிறையாகி நீர்போக
சீக்கிரமாய் வருகின்றேன்
என்ற வார்த்தையிலே
வாழ்கின்றேன்.

செந்நிற மேனியிலே
உன்னுதிரம் ஊற்றெடுக்க
பார்போரும் உமை நோக்கி
தலை துலுக்கி பரிகசிக்க
அக்கனமும் நோக்கினீரே
பாவி என்னை பாசத்தோடு

செம்மையாய் தோன்றும் வழி
உம்மண்டை யிலேயிருக்க
சீக்கிரமாய் வந்தெம்மை
உம் மணவாட்டியாக்கிடுமே...

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரி
வனிதா காளிமுத்து

# தேவ செய்தி

கிறிஸ்த்துவுக்குள் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்திலே "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமா 8:28.

அப்படியெனில் நமக்குள்ளாகவே ஒரு சந்தேகம் எழும்புகிறது அல்லவா? நாமும் தேவனிடத்தில் அன்பு கூறுகின்றோமே? நம்முடைய வாழ்க்கையில் எல்லாம் நன்மையாக நடக்கவில்லையே என்பதாக பல கேள்விகளை நாம் எழுப்ப கூடும் அந்த வசனத்தை நாம் ஆழ்ந்து சிந்திப்போமேயாகில் நம்முடைய வாழ்க்கையிலும் எல்லாம் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். எல்லாம் நன்மையாகவே நடக்கும் என்றல்ல, என்ன துன்பம், இடறல், வந்தாலும் கடைசியாக அது நன்மைக்கு ஏதுவாகவே மாறும். நம்முடைய வேதாகமத்திலும் கூட தேவன்மேல் அன்பு வைத்திருந்த சில நபர்களை குறித்தும், அவர்களுக்கு உண்டான இக்கட்டிலே கர்த்தர் எப்படி நன்மைக்கு ஏதுவாக நடத்தினார் என்பதை குறித்தும் நாம் பார்க்கலாம்.

யோசேப்பை குறித்து பார்க்கும் போது, யோசேப்பை அவர் தகப்பன் அதிகமாய் நேசித்தான், அவன் சொப்பனங்களை குறித்து விளக்கம் சொல்கிறவனாய் காணப்பட்டான், அவன் சகோதரர்களே அவனை பகைத்தார்கள், அவன் மேல் உள்ள பகையின் காரணமாக அவனை குழியிலே போட்டார்கள், மீதியானியர் அவனை அந்த குழியிலிருந்து எடுத்து இஸ்மவேலர்களுக்கு 20 வெள்ளிகாசுக்கு விற்றுபோட்டார்கள், ஆனால் நடந்தது என்ன? அவனை போத்திபார் இடத்திலே சேர்த்தார்கள், கர்த்தர் அவனோடே இருக்கின்றார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்க பண்ணுவார் என்றும் போத்திபார் அறிந்து கொண்டான், பல விதமான சோதனைகள் வந்தபோதிலும் கர்த்தர் அவனோடே இருந்து அவனை நன்மைக்கு ஏதுவாக நடத்தினார். பார்வோனின் சொப்பனத்திற்க்கு அர்த்தத்தை சொன்னதன் நிமித்தமாக அவனை அவன் எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினார் . பஞ்சகாலம் வந்த போது தன் சகோதரர்களிடமும் அவன் இரக்கம் பாராட்டினான் யோசேப்பு எத்தனை மோசமான சூழ்நிலையை கடந்து வந்திருந்தாலும் தேவன் கடைசியில் எல்லாவற்றையும் நன்மைக்கு ஏதுவாகவே செய்தார் என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

 எஸ்தரை குறித்து பார்க்கும் போது தாய் தகப்பன் இல்லாத மொர்தெகாய் மூலமாக வளர்க்கபட்டவள், அவள் அகாஸ்வேருவின் அரண்மனையிலே அழைத்துக் கொண்டுபோகபட்டு யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள். எஸ்தருக்கு ராஜாவின் கண்களிலே தயைகிடைத்தது அவள் அந்த தேசத்து பட்டத்து ராணியாக நியமிக்கப்பட்டாள். ஆமான் என்னும் பிரபு மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததினால் மூர்க்கம் நிறைந்தவனாய் அகாஸ்வேருவின் ராஜ்ஜியமெங்கும் இருக்கிற யூதரையெல்லாம் சங்கரிக்க வகைதேடினான். எஸ்தரின் மூலமாக கர்த்தர் அந்த இடத்திலே யூதர்களை விடுவிக்க பண்ணினார். அவள் யூதருக்காக ராஜாவினிடத்தில் பேசுவதற்க்கு முன்பு யூதரையெல்லாம் கூடிவர செய்து அல்லும், பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து உபவாசம் பண்ணும் படியாக கேட்டுக் கொள்கிறாள் அதினிமித்தமான ராஜாவின் கண்களில் தயை கிடைக்க பெற்றது, யூதகுலம் முழுவதும் வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும் கனமும் உண்டாயிற்று. (எஸ்தர் 8:16)

மேலும் நாம் யோபுவை குறித்து பார்க்கும்போது யோபு உத்தமனும்,சன்மார்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான் அவனை குறித்து கர்த்தரே சாத்தானிடத்தில் பேசுகிறதை நாம் பார்க்க முடியும் (யோபு 1:8) அவனை சாத்தான் சோதிக்கும் படியாக அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் பறித்துக் கொண்டான் ஆனாலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை. அவனுடைய உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை வரைக்கும் பருக்களால் வாதித்தான். அவன் மனைவி அவனை பார்த்து நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள். ஆனாலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை. பிரியமான தேவனுடைய ஜனமே நாமேவென்றால் ஒரு சிறிய காரியம் வரும்போதே நான் தேவனிடத்தில் அன்பாயிருந்தேனே ஆனாலும் எனக்கு இப்படியெல்லாம் நடக்கிறதே என்று மனம் வாடி போவோம், யோபுவோ என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனை பார்பேன். அந்நிய கண்கள் அல்ல என் கண்களே அவரை காணும் என்பதாக குறிப்பிடுகின்றார்,

பிரியமானவர்களே அவனுடைய எல்லா உபத்திரவத்திலிருந்தும் கர்த்தர் யோபுவை விடுவித்து அவன் முன்னிலைமையைப் பார்க்கிலும் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்

ஆம் பிரியமானவர்களே I கொரிந்தியர் 2:9-ல் எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண்

காணவுமில்லை,காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே தேவனிடத்தில் அன்பு கூறுகின்ற நமக்கு அவர் ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிற நன்மைகளை அவர் நமக்கு ஆவியினாலே வெளிப்படுத்துவார். பிரியமானவர்களே நம்முடைய வாழ்விலும் ஆரம்பம் அற்பமாயிருந்தாலும் முடிவு சம்பூர்ணமாய் மாற்ற நம்முடைய தேவன் நல்லவர் எனவே நாமும் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களாய் காணப்படும் பொழுது சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கும் என்பதை நாமும் அறிந்து கொள்ள முடியும்.

கர்த்தருடைய கிருபை நம் அனைவரோடும் எப்பொழுதும் இருப்பதாக. . . ஆமேன்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
**ஆரோக்கிய ராஜ்**

## குட்டி கவியின் அழகான கவிதை

ஜீவன் தந்தாரே ஜீவன் தந்தாரே
இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே
ஆஹா என்ன ஆனந்தம்
ஒஹோ என்ன பேரின்பம்

உயிர் வாழும் நாளெல்லாம்
இயேசுவை பற்றி சொல்ல
ஜீவன் தந்தாரே இயேசு

நாம் வாழும் வாழ்வே
சாட்சியாய் இருக்க ஜீவன்
தந்தாரே இயேசு

அழியும் ஜனங்களுக்காக திறப்பில் நின்று
கண்ணீரோடு ஜெபிக்க ஜீவன்
தந்தாரே இயேசு

செல்வி
**ரித்திக்ஷா பிரசாத்**

# அன்புக்கு கீழ்படிதல் விசுவாசம்

**கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.**

இந்த வருடத்தின் 7 மயதங்களை கடந்து 8 ஆவது மாதத்திற்குள் பிரவேசிக்க ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கடந்த நாட்கள் முழுவதம் நம்மை கண்மணிபோல் பாதுகாத்து ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுகம், ஜீவன், பெலன், நீடிய ஆயுளை கொடுத்து அவர்களின் தேவைகள், விண்ணப்பங்களை கேட்டு நம் குடும்பங்களுக்கு தேவன் செய்த எல்லா நன்மைகளுக்கும் நன்றி கடன் செலுத்துவோம்.

கர்த்தர் இரக்கமும், உருக்கமும், நீடிய சாந்தமும், கிருபையும் உள்ளவர். நம்முடைய பாவங்களையும்,அக்கிரமங்களையும் மன்னிக்கிற தேவனாகிய கர்த்தர், தம்முடைய குணாதிசியங்களால் நம்மை ஆசீர்வதிக்கின்றார்.

**அன்பு:** உன்னிடத்தில் அன்பு கூருவது போல் பிறரிடத்திலும் அன்பு கூரு" என்று கூறின ஆண்டவர் நம்மேல் அன்பு கூர்ந்த எத்தனை நன்மைகள் செய்கிறார் என்று பார்ப்போம். சங்கீதம்.: 103 : 3.4.5. அவர் அன்புள்ள தேவன் நம்முடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் மன்னிக்கிற தேவனாயிருக்கிறார். பல வேளைகளில் உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு காத்து வருகிறார். உன் குடும்பத்திலும் வேலை ஸ்தலங்களிலும் பாதுகாக்கிற தேவன் நம்மோடு இருக்கிறார். இப்படி ஆண்டவர் நம்மிடம் அன்பாக இருக்கும் போது நாம் திருப்பி அவருக்கு என்ன செலுத்த வேண்டும், யாத் 20:6 என்னிடத்தில் அன்பு கூர்ந்து என் கர்ப்பனைகளை கை கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராய் இக்கிறேன் என்று கூறுகிறார். நாமும் அதிகாலையில் வேதம் வாசித்த தியானித்து அவர் வழிகளிலும் வார்த்தைகளிலும் நடக்கும் போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.

**விசுவாசம் :** விசுவாசத்தின் தகப்பன் என்று ஆபிரகாம் அழைக்கப்பட்டார். ஆதி 15:5,6 உன் சந்ததி வானத்தின் நட்சத்திரங்கள் போல இருக்கும் என்று ஆசீர்வதித்தார். பின்பு ஆதியாகமம் 15: 4,5,6 நான் உன்னை திரளான ஜனங்களுக்கு தகப்பனாக வைப்பேன் என்று ஆசீர்வதித்தார். ஆனாலும் ஆபிரகாம் 100 வயது ஆன போதும் சாராள் 3,4,5)வசனங்களில் கொடுத்த வார்த்தையின் படி யோசுவா ஆண்டவருடைய வார்த்தைகளை விசுவாசித்து நடந்த பொழுது எரிகோ பட்டிணத்தாரை முறியடித்தார்கள். நாமும்கூட நம்முடைய விண்ணப்பங்களை ஆண்டவரிடம் மேட்கும் போது அவர் நமக்கு அருளிச் செய்வார் என்ற விசுவாசத்தோடு கேட்டு பெற்றுக் கொள்ள வேண்டும்.

**கீழ்படிதல்:** ஆண்டவர்கூட தன்னுடைய தகப்பனோடு 30 வருடங்கள் வீட்டிலிருந்து உதவி செய்தார். பின்பு மூன்றறை வருடங்கள் ஆண்டவருடைய ஊழியத்தை செய்து அநேக அற்புத அடையாளங்களோடு செய்து ஆண்டவருடய வார்த்தைக்கு கீழ்படிந்து நடந்தார். எவ்வளவு பெரிய கீழ்படிதல் (ஆதியாகமம் 12: 1.2.3.4)

( தொடர்ச்சி 13 ஆம் பக்கம்)

# 2021 –ஜுலை மாத வேத வினாவுக்கு விடை

1. பிலதெல்பியா (வெளி. 3:7–8)
2. பிசாசு / சாத்தான் (வெளி. 12:9)
3. தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும். (வெளி. 15:8)
4. வெட்டுக்கிளி (வெளி. 9:7)
5. சகலவித இரத்தினங்களினாலும் (வெளி. 21:19–20)
6. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள்.(வெளி. 13:8)
7. ஒருவனும் பாத்திரவானாகக் காணப்படாததினால் (வெளி. 5:4)
8. உடன்படிக்கையின் பெட்டி (வெளி. 11:19)
9. வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் (வெளி. 17:5)
10. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வெளி. 7:4)
11. மரணமும் பாதாளமும் (வெளி. 20:14)
12. அது தேனைப்போல மதுரமாயிருந்தது (வெளி. 10:10)
13. சீயோன் மலை (வெளி. 14:1)
14. மரணம் / பாதாளம் (வெளி. 6:8)
15. தியத்தீரா சபையின் (வெளி. 2:18–19–20–21

## 2021 ஜுலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசுரெத்தினம்
Sis. வனிதா காளிமுத்து
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஷீபா அருண் இம்மானுவேல்
Sis. செலின் டேவிட்
Selvi. வின்சி டேவிட்

……..உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

சகோ. ஜெப துரை
செல்வி.கெத்சியா ராஜேந்திரன்
சகோ. பிராங்ளின் கலை செல்வன்
சகோதரி . ஆனந்தவள்ளி ராஜேந்திரன்
சகோதரி. மெர்ஸ்லின் ஏசுரெத்தினம்
செல்வி. காயத்ரி கொம்மையன்
சகோ. ஜாப் ஆபிரகாம் வில்கின்ஸ்
செல்வன். எரிக் நாதன் ஆன்டனி
சகோ. கிறிஸ்டோபர் தேவராஜ்
சகோ. வில்சன் செல்லையன்
சகோதரி. எமிமாள் சாமுவேல்
சகோ. ஆரோக்கிய தாஸ்
சகோதரி. ஸ்நேக லதா கிறிஸ்டோபர்
சகோ. கென்சிங்ராஜா

செல்வி. புஷ்பா ராஜன்
சகோ. சதீஷ்குமார்
சகோ. வேளாங்கண்ணி
சகோ. அருண் இம்மானுவேல்
செல்வன். ஆரோன் விஜயன்
சகோ. ஜெரின்
செல்வி. சிஃபன்சிஹா சாம்ஆனந்த்
சகோ. மேஷாக் சைமன்
சகோதரி. சவ்மியா சுனில் வின்ஸ்
சகோதரி. ஆஸ்லின் ரோனியா சுபின் சிங்
செல்வன். பெனோ ஜெரின்
சகோதரி. டெய்சி ஶ்ரீனா ஆன்டனி
சகோ. சங்கீதராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்(ஆதி .22:18)

திருமதி /திரு. எபிநேசர் .V (MOH)
திருமதி /திரு. ஜெயக்குமார் ஞானதாஸ்
திருமதி / திரு. ஸ்டீபன் ஜெயக்குமார்
திருமதி /திரு.டேனியல் ராஜ்
திருமதி /திரு. ராஜேந்திரன்
திருமதி / திரு. இம்மானுவேல் ஸ்டீபன்

திருமதி / திரு. ஜெரின்
திருமதி / திரு. பால்ராஜ் ஆமோஸ்
திருமதி /திரு. ராஜேஷ் CR
திருமதி / திரு. சிவகுமார்
திருமதி / திரு. ஆரோக்கியராஜ்
திருமதி /திரு. கமலதாசன்
திருமதி /திரு. மேஷாக் சைமன்

*நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;*

*ஏசாயா 54:3*

11

# 2021 ஆகஸ்டு மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 6:30 முதல் இரவு 8:00வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 1/8/2021 | சகோ. பிரசாத் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 08/08/2021 | சகோ. எபிநேசர் (MOH) | சகோ.கிறிஸ்டோபர் |
| 15/08/2021 | சகோ. ஃபிராங்ளின்(NBTC) | சகோ.அந்தோனி |
| 22/08/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. அருன் இம்மானுவேல் |
| 8/29/2021 | சகோ. வேலுராமர் | சகோ. எபிநேசர் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 10 முதல் 12 வரை மாலை 3:00 முதல் 5:00

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 6/08/2021 | சகோ.டேவிட் ஜெயகுமார் | சகோ ஆரோக்கியதாஸ்<br>சகோ. இயேசு ரெத்தினம் |
| 13/08/2021 | சகோதரி. ஹெப்சிபா ஸ்டீஃபன் | சகோ. ஜெகநாதன் |
| 20/08/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 8/27/2021 | சகோ. ஐசக் துரை | சகோ. ஸ்டீஃபன் |

**12/08/2021 அன்று முழு இரவு ஜெபம்**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**28/08/2021 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

(கூடுகையை பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் சகோதரி. ஆஸ்லின் சுபின் சிங்)

(வேதவினா பகுத லேவியராகமம் )

**27/08/2021 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

(இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம்– வெள்ளிகிழமை காலை ஆராதணைக்கு பின் )

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதணை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதணையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதணை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6:30 :மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதணையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 ஆகஸ்டு மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. ---------தரித்தது---------------நின்றது?

2.. ------- எப்பிராயீமுடையது, ------- மனாசேயினுடையது?

3.உங்கள்--------------- மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்?

4. புத்திமானாய் நடந்துகொள்ள எதை, எப்படி தியானிக்க வேண்டும்?

5. யோசுவா யாரை ஆசீர்வதித்து எதை சுதந்தரமாக கொடுத்தார்?

6. யாருக்கு எது நினைப்பூட்டும் அடையாளமாக வைக்கப்பட்டது?

7. யாருக்கு விரோதமாக எவனும் தன் நாவை அசைக்கவில்லை?

8. திம்னாத் சேராவில் அடக்கம் பண்ணப்பட்டது யார்?

9. முதல் மாதம் பத்தாம் தேதியிலே எங்கு பாளயமிறங்கினார்கள்?

10. எதையெல்லாம் கைக்கொள்ள நிர்ணயம் பண்ணவேண்டும்?

11. எகிப்தின் நிந்தையை இராதப்படிக்கு புரட்டிப் போட்ட ஸ்தலம் எது?

12. எதற்கு ஏத் என்று பேரிட்டார்கள்?

13. எது கர்த்தருக்கு பரிசுத்தமானவை?

14. முழு கற்களால் என்ன கட்டப்பட்டது? எங்கு கட்டப்பட்டது?

15. எவர்கள் குணமாகுமட்டும் பாளயத்தில் தங்கியிருந்தார்கள்?

விடைகளை வருகின்ற 20-08-2021க்குள்(whatsApps #66015503) **என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் "யோசுவா" புத்தகத்தில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்**

**- - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; -மத்தேயு 7:7**

 ( 8ஆம் பக்க தொடர்ச்சி)

கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னபடியே அவர் தேசத்தை விட்டு தனக்கு குறித்த முன் பின் தெரியாத தேசத்திற்கு கீழ்படிந்து போனார் என்று பார்கிறோம் (ஆதியாகமம் 22:2,12)வசனங் களில் ஆபிரகாம் தன் மகனை ஆண்டவருக்கு பலியிடுவதற்காக கீழ்படிந்து மோரியா மலைக்கு சென்றார். அதனால் ஆபிரகாமுக்கு எல்லா ஆசீர்வாதமம் கிடைத்தது என்று பார்க்கிறோம். அவர் மாத்திரம் அல்ல அவர் மகன் ஈசாக்கிற்கும் 100 மடங்கு பலனை கிடைக்க பெற்றார் நாமும்கூட நம்தாய் தகப்பன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் உற்றார் உறவினர் எல்லாரோடும் அன்புடன் கீழ்படிந்து நடக்க பழகிக் கொள்வோம்.

நம் வேலை பார்க்கும் ஸ்தலங்களிலும் அதிகாரிகளுக்கு கீழ்படிந்து நடக்க கற்றுக் கொள்வோம். மற்றவர்களுக்கும் நமக்கும் ஆண்டவர் பெரிய வித்தியாசத்தை வைத்திருக்கிறார் ஆண்டவரை சிலுவையில் அறைவதற்கு முன்பாக தகாத வார்ததைகளாள் எள்ளி நகையாடி அவருடைய தாடையை பிடித்து இழுத்தார்கள். அவரோடு சிலுவையில் அறையப்பட்ட ஒரு கள்வனோ அவரை பார்த்து ஏளனமாக பேசுகிறான். கோலால் அடிக்கப்படுகிறார் ஆனாலும் நம் ஆண்டவர் கர்த்தருடைய வார்த்தைக்க கீழ்படிந்து ஆண்டவரிடத்தில் மன்றாடுகிறார் உமக்கு விருப்பமானால் என்னுடைய ஜீவன் இந்த உடலை விட்டு நீங்கட்டும் என்றும் எதிர்த்தவர்களையும் அடித்தவர்களையும் மன்னிக்கும்படி மன்றாடுகிறார்.

அருமையான தேவ பிள்ளைகளே கர்த்தர் நமக்காக யுத்தம் செய்கிறவராய் இருக்கிறார். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.(யாத் 15:14)ன் வசனத்திற்கேற்ப நம்மை தாழ்த்தி கர்த்தருக்கு கீழ்படியும் போது கர்த்தர் தம்முடைய வாழ்க்கையை உயர்த்துவார்.

உலகப்பிரகாரமான சிலர் இப்படி சொல்வார்கள் மேல்படிக்கு செல்ல வேண்டும் என்றால் கீழ்படியை நாம் மிதித்துதான் செல்ல வேண்டும். அதன்படி நாம் மேல்படிக்கு செல்ல வேண்டும் என்றால் நமக்கு கீழ்படிதல் மிக மிக அவசியம் அப்படி கீழ்படிந்து நடக்கும் பட்சத்தில் எல்லவற்றிலும் கர்த்தர் நம்மை ஆசீர்வாதத்தோடு நடத்துவார். எதிர்த்து நிற்கும் போது எப்படி பெருவெள்ளத்திற்கு எதிர்த்து நிற்கிற பெரிய பெரிய மரங்கள் வேரோடு பெயர்ந்து போய் விடும்,ஆனால் வளைந்து கொடுக்கிற நானல் சிறியதாய் இருந்தாலும் வெள்ளம் வற்றியவுடன் தலைநிமிர்ந்து நிற்கிறதை காணலாம்.

அதுபோல பிரியமானவர்களே நாம் எதிர்த்து நிற்கும் பொது இருந்த இடம் தெரியாமல் போய்விட நேரிடலாம் நானலை போல வளைந்த கீழ்படிய கற்றுக் கொள்வோம். வருகின்ற நாட்களில் நாம் இந்த மூன்று குணங்களையும் ஆண்டவரிடத்தில் ஜெபித்து பெற்றுக் கொள்வோம் கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

ஆமேன் ! அல்லேலூயா!

( 18 ஆம் பக்க தொடர்ச்சி)

## 5. அன்னமிட்ட காரிகை ( 1 இராஜா 17)

தேசத்தில் கடும் பஞ்சம், பசி கொடுமை வாட்டி வதைக்க, பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெய் மட்டுமே உள்ள நிலையில், தனக்கும், தன்மகனுக்கும், அப்பம் உண்டாக்கி சாப்பிட்டுவிட்டு இறந்துபோக வேண்டும் என்ற விரக்தியின் விளிம்பில் நின்று விறகு பொருக்கி கொண்டிருந்த "சாரிபாத்" விதவையிடம் உண்பதற்கு முதல் அப்பமும் தண்ணீரும் கேட்டார் எலியா தீர்க்கதரிசி, அவள் எலியாவின் சொற்படியே செய்தாள், அதன் விளைவு என்ன?

அவள் வீட்டில் அப்பமும் எண்ணெயும் குறையவே இல்லை– மட்டுமல்ல உயிரிழந்த மகன் உயிர்பெற்று எழுந்தான்.

பிற்காலத்தில் இயேசு கிறிஸ்து –தேவாலயத்தில் காணிக்கை செலுத்திய ஏழை விதவையை குறித்து கூறிய நல்வார்த்தை " தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் கர்த்தருக்கென்று செலுத்தினால்" என்பதை நினைவு கூறுவோம்.

## 6. ஆண்டகையான அடிமை:–(2 இராஜா 5)

இஸ்ரவேல் தேசத்து ஒரு சிறு அடிமை பெண்ணை சீரிய ராஜாவின் படை தலைவன் நாகமானின் குஷ்டரோகம் குணமாகும்படி கர்த்தர் பயன்படுத்திய எளிய பாத்திரம்– தன் நாச்சியாரிடம் " என்ஆண்டவர் சமாரியாவில் இருக்கிற தீர்க்கதரிசியிடம் போவரானால் நலமாயிருக்கும். (2 இராஜா 5:3) அவர் இவரு–டைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்" என்று நாச்சியாருக்கே ஆலோசனை சொல்லும் சிறிய பெண். இறுதியில் நடந்தது என்ன? (2 இராஜா 5:15) ன்படி "இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிரப் பூமியெங்கும் வேறே தேவன் இல்லை" என்பதை அறிந்தேன். என்று தன் நாவினால் படைதலைவன் நா–கமான் அறிக்கையிடுகிறான்.

ஆம் அன்பு சகோதர சகோதரிகளே வாழ்க்கையில் நாம் எந்த நிலையில் இருந்தாலும் கர்த்தர் பயன்படுத்தும் ஒரு பாத்திரமாக இருப்போம். "கர்த்தரே தேவன்" என்பதற்கு சாட்சியாக வாழுவோம். கர்த்தர் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!!!

கிறிஸ்துவுக்குள்

என்றென்றும் நட்புடனான

அன்பு சகோதரி **அனிதா தாஸ்**

## பரிசுத்தத்தை காத்துக்கொள்!

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையோர் அனைவருக்கும் கர்த்தரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

இன்றைய சூழ்நிலையில் பரிசுத்தமாக வாழ்வது, பரிசுத்தத்தை காத்து கொள்வது என்ற இந்த இரண்டும் கடினமான ஒன்று என்று வேதம் சொல்கிறது. பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனை தரிசிப்பதில்லை என்று. (ரோமர் 2:1) இப்படியாக சொல்கிறது" "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று," நம்முடைய பார்வையில், பேச்சில், நடத்தையில், சிந்தனையில்,பரிசுத்தம் தேவை, ஆவியானவரின் துணை இருந்தால் இவற்றை நாம் எளிதாக வென்றுவிடலாம், கண்களில் ஒரு தூசியோ அல்லது துகளோ விழுந்தால் எவ்வளவு சீக்கிரம் அகற்றிவிடுகிறோமோ அதை போல சிறிய பாவம் என்று உணர்த்தபட்டவுடனே அதனை விட்டு விலகிட வேண்டும் இல்லையெனில் அது வளர்ந்து மரமாகிவிட்டால் அதை அகற்றுவது என்பது மிக மிக கடினமான ஒன்று ( 1 பேதுரு 1 –15–16) ல் இப்படியாக வாசிக்கிறோம் "உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்று வேதம் சொல்லுகிறது.

ஆம் பிரியமான சகோதரனே சகோதரியே சில நேரங்களில் நாமும் கூட யோசேப்பை போல பல காரியங்களை கழட்டி எறிய வேண்டும், தானியலை போல மனதை மகிழ்விக்ககூடிய செயல்களை களைய வேண்டும், யெகூவை போல கர்த்தர் வெறுக்கிற காரியங்களுக்கு விலகி நிற்க வேண்டும்

ஒரு செத்த ஈ ஆனது தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறி கெட்டு போக பண்ணும். அது போலத்தான் நம்முடைய ஒரு சிறிய பாவம் நம்முடைய வாழ்நாளின் பரிசுத்தத்தை கெடுத்துவிடும் நம்முடைய பரிசுத்தமற்ற வாழ்வின் பெயரால் ஆண்டவராகிய இயேசுவின் நாமம் தூஷித்துவிடாதபடி நம்முடைய நடத்தையில் ஆவியின் கனிகள் காணப்பட வேண்டும், எங்கு சென்றாலும் இயேசுவையும் அவரது நாமத்தை சுமந்து செல்பவராக இருப்போம்.

பரிசுத்தமாய் இருப்பவர்கள் இன்னும் பரிசுத்தமாய் இருக்கக்கடவன், நம்முடைய பரிசுத்தம் கடலின் ஆழத்தை போல நீண்டு கொண்டே செல்லட்டும் ஒரு போதும் அது கரை சேராதபடியும் அவ்வாறு நமது எண்ணங்களை மாற்றிகொள்ளாத படி ஆழமான பரிசுத்தத்தை விரும்பவோம்.

நம்முடைய இருதயம் பால்போல வெண்மையாக இருக்கும்படி வைத்து கொள்வோம் அப்பொழுதான் ஒரு சிறு கரைபடிந்தாலும் அதை அகற்றவும் மற்றும் நாம் தெரிந்து கொள்ள அது ஏதுவாக இருக்கும்.

சிந்தனை கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கும், பாவம் மரணத்தை பிறப்பிக்கும், என்று வேதம் சொல்லுகிறது. சிம்சோனுடைய சிந்தையில் பாவம் வந்தவுடன் அதை அகற்றி இருந்தால் அவன் கண்கள் பிடுங்கப்பட்டு பரிதவித்திருக்கமாட்டான். இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த அதே சிந்தை நமக்கும் இருக்க வேண்டும். நம்முடைய சிந்தை பரிசுத்தமாய் இருந்தால் மற்ற காரியங்களில் பரிசுத்தமாய் இருப்போம் நீதி மொழிகள் 4:23" எல்லாக் காலலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்"

எல்லாவற்றிற்கக்கும் மேலாக விழித்திருந்து ஜெபம் பண்ண வேண்டும், வேத வசனத்தை தியானிக்க வேண்டும். இயேசு நல்லவர் ருசித்து பார்க்கவேண்டும். ஆவியானவருடைய வழி நடத்துதலை அறிந்து கொண்டு ஆவியின் கனிகளான ஒன்பதையும் பகிர்ந்து கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தவான்களை ஒன்று சேர்க்க மத்திய வானில் வேகமாக வரப்போகிறார் அவரை எதிர்கொண்டு வரவேற்கிற மணவாட்டிகளாக நாம் வாழ்வோம். அபிஷேகம் என்னும் எண்ணையின் பரிசுத்தம் குறையாமல் பார்த்து கொள்வோம்!

மாரா நாதா சீக்கிரம் வாரும் ! அல்லேலூயா ஆமென் !

**வாலிபம் இயேசுவுக்கே!**

## நீங்கள் கை தொலை பேசி அதிகமாக உபயோகிக்கிறவர்களா? உங்களுக்கு ஓர் எச்சரிக்கை

செல்போன்கள் பயன்படுத்தும் போது 0.5 முதல் 1 வாட்கிலோ சக்தி கொண்ட அதிர்வலைகள் வெளியாகின்றன. அந்த அதிர்வலைகள் நமது உடலுக்குள்ளும் புக இயலும். தேசிய கதிரியக்க பாதுகாப்பு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சமீபத்தில் வெளிவரும் நவீனவகை செல்போன்கள் உடல் தசைகளில் குறிப்பிடத்தக்க மாறுதல் உண்டாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 10 ஆண்டுகள் தொலைபேசி பயன்படுத்தபவர்களில் 1600 நபர்களிடம் ஆய்வு செய்யப்பட்டது. இத்தகைய நபர்களுக்கு மூளை நரம்புகளில் கட்டி ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. ஒருநாளில் ஒருமணி நேரம் செல் போனில் செலவழிப்பவர்களுக்கு கட்டி தோன்றுவது 30 சதவீதம் கூடுதலாக ஏற்படுவதற்கு வாய்புகள் உள்ளன என அந்த ஆராய்ச்சியின் அறிக்கை கூறுகின்றன. மூளைகளில் ஏற்படும் இந்த கட்டிகள் காதுகளில் இருந்து ஒலியை மூளைக்கு கொண்டு செல்லும் நரம்புகளை தாக் குவதாகவும் அறியப்பட்டுள்ளது. இதனால் காது கேளா தன்மையும் ஏற்படலாம். இது தவிர நமது உடலில் உள்ள உயிரணுக்களில் டி.என்.ஏ எனப்படும் மரபு அணுக்கூறுகளிலும் பாதிப்பு தோன்றுகிறது.

## சகோதரிகள் பகுதி

இருந்தவரும் இருக்கிறவரும் வரப்போகிறவருமாகிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் சகோதரிகள் பகுதயில் இந்த பதிவிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

பொதுவாக பெண்கள் என்று எடுத்துக்கொண்டால் வேதாகமத்தின் அடிப்படையில் எஸ்தர் ராஜாத்தி அல்லது ரூத் போன்ற நல்ல மருமகளை உதாரணமாக கொள்கிறோம்.

ஆனால் இந்த பதிவில் அனைவராலும் எளிதில் நினைவு கூரப்படாத சில பெண்களை குறித்த ஆராய்வோம்:

### 1. வீரமங்கைகள் (யாத் 1:5)

பலுகி பெருகி வரும் எபிரேயர்களின் ஆண் குழந்தைகளை கொன்றுவிடும்படி கட்டளையிடுகின்ற பார்வோன் மன்னனை கண்டு அஞ்சாமல் தேவனுக்கு பயந்து எபிரேய ஆண் குழந்தைகளை உயிரோடு காப்பாற்றுகின்றனர் வீரமங்கைகளான எபிரேய மருத்துவச்சிகள் சிப்பிராள் மற்றும் பூவாள்.

காரணம் :l எபிரேயர்களின் சிறுவர் குழாம், ஒலிவ கிளைகளை பிடித்தவராய், உன்னதங்களில் ஓசன்னா.., என்றே முழங்கி ஆர்ப்பரித்தே.., ஆண்டவரை எதிர்கொண்டனரே!!!

ஆம்! பிற்காலத்தில் இயேசு கிறிஸ்துவை வவேற்க..ஒலிவ கிளை–களை கையில் ஏந்தியவர்களாய், நடனமாடி எதிர்கொள்ள, ஓசன்னா பாடல்களை பாட எபிரேயர்களின் தலைமுறை வேண்டுமல்லவா?

### 2. உயர்ந்த விலைமகள்கள்(யோசுவா 2:1)

" விலைமகள்" என்றாலே பாலியல் தொழில் செய்யும் பெண் என்று முகம் சுழிக்கின்ற உலகம், இப்படியாக வெறுத்து ஒதுக்கபட்ட குலத்தில் தோன்றிய "ராகாப்" என்ற பெண் யோசுவா அனுப்பிய இரண்டு வேவுகாரர்களையும் எரிகோ மன்னனின் கைக்கு நீங்கலாக்கி ஜீவனை காப்பாற்றிய விலைமகள்... அல்ல.. குலமகள்.(யோசுவா 2:11)ன் பிற்பகுதியின் படி, "உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்". என்று தேவ சாட்சி மகளாக மாறுகின்றனர்.

புதிய ஏற்பாட்டு காலத்திலே ( லூக் 7:37)–ன் படி , பரிசேயன் வீடடில் பந்தி அமர்ந்திருந்த இயேசு கிறிஸ்துவின் பாதங்களை தன்கண்ணீரினால் நனைத்து, விலையுயர்ந்த நறுமனமிக்க பரிமளதைலத்தை ஊற்றி, தன் கூந்தலினால் துடைத்து, ஓயாமல் முத்தம் செய்த மரியாள் விலைமகள் அல்ல ..விலையுயர்ந்த திருமகள் அல்லவா.!

## 3. தன்னிஷ்ட தாரகை : (ஆதியாகமம் 34:1)

யாக்கோபின் புதல்வி "தீனாள்" தனியொருத்தியாய் தேசத்தின் பெண்களை பார்க்க சென்றிருந்தாள், ஏமோரின் குமாரனாகிய "சீகேமினால்" தீட்டு படுத்தப்பட்டாள்.

கண்போண போக்கில் கால்கள் சென்றதால் வாழ்வை தொலைத்தாள்.

இன்றைய நவநாகரீக உலகில் தாயின் வயிற்றிலிருந்து வெளிப்படும் பிஞ்சு குழந்தைகளின் கரங்களிலே மின்னனு கைபேசிகள் கொடுக்கபடுகிறதே ... முகநூல் நட்புகள் உரையாடல்கள் எத்தணையோ தீனாக்களின் வாழ்வை சிதறடிக்கின்றன அல்லவா?

அவசர உலகில் –ஆபத்தான பயணம் – காலத்தின் கோலம் – இது என்று எண்ணாமல் "கர்த்தருக்கு பயப்படும் ஸ்திரியே புகழப்படுவாள்" என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## 4. பொருத்தனையின் தியாக மங்கை: ( நியாதிபதிகள்–11:36)

வேதத்தில் பலவிதமான பொருத்தணைகள் கர்த்தருக்கென்று ஏறெடுக்கபடுகிறது, இதில் என் உள்ளம் நிலைகொண்ட பொருத்தனை:– அரசன் "யெப்தா" கர்த்தரின் சமுகத்தில் நின்று " அம்மோன் புத்திரரை என் கையில் நீர் ஒப்புகொடுத்தால் வெற்றியோடு நான் திரும்பி வரும் போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அதனை கர்த்தருக்கென்று சர்வாங்க தகன பலியாக செலுத்துகிறேன்" என்றான்.

ஆனால்.. ஐயகோ : எதிர்கொண்டு வந்தது ஆடு மாடு அல்ல... தன் ஒரேமகள் தம்புரு வாசித்து நடனத்தோடு வந்தாள். மனம் கலங்கினான் மன்னன், ஆனால் மகளோ — அஞசாமல்– பதராமல்,

"ஜெயத்தை கர்த்தர் உங்களுக்கு கட்டளையிட்டபடியினால் உம்முடைய வாயினால் சொல்லப்பட்ட "பொருத்தனையை" என்னில் நிறைவேற்றுவீராக, என்று தலை நிமிர்ந்து நின்றாள். கர்த்தருக்கென்று தகனபலியாக கன்னிப்பெண் துணிந்து நின்றால். (பிரசங்கி 5:4–5) " நீ நேர்ந்து கொண்டதை செய்யாமல் போவதை பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்" – எனவே– கர்த்தருக்கென்று ஒரு பொருத்தனை நாம் செய்து கொண்டால் –அதை செலுத்த தாமதியமல் இருப்போமாக.

( தொடர்ச்ச 14 ஆம் பக்கம் பார்க்க)

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில



உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்



சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444



செயலாளர்

சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812



பொருளாளர்

சகோ. ஜெகநாதன்

66889535 - 98852812



பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551



வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only